





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## ஜூன்- 2019

*We Are Here..!! To Guide You..!!*






# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## ஜூன் - 13.06.2019

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்




- தமிழக நிகழ்வுகள்
- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விருதுகள்
- வர்த்தக நிகழ்வுகள்







## தமிழக நிகழ்வுகள்

- **தூத்துக்குடியில் உள்ள வ.உ.சி துறைமுக அறக்கட்டளை மற்றும் மத்திய கிடங்குக் கழகம் ஆகியவை நேரடித் துறைமுக நுழைவு (Direct Port Entry) வசதிக்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.**
    - DPE ஆனது தொழிற்சாலைகளிலிருந்துச் சரக்குக் கொள்கலன் முனையத்திற்கு சரக்குக் கொள்கலனின் நேரடி இயக்கத்தை ஏற்படுத்தும். இது கொள்கலன் சரக்கு நிலையத்தில் எந்தவொரு இடைநிலை கையாளுதலும் இல்லாமல் அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் இயங்கும்.
    - தமிழ்நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய துறைமுகம் வ.உ.சி துறைமுக அறக்கட்டளையாகும் இது மன்னார் வளைகுடாவில் அமைந்துள்ளது.

## தேசிய நிகழ்வுகள்

- **2020 ஆம் ஆண்டின் சுவச் சர்வேக்சான் குழு (SSL – 2020 – Swachh Survekshan League) வீட்டு வசதி மற்றும் நகர விவகாரங்களுக்கான அமைச்சர் ஹர்தீப் சிங் பூரியாஸ் தொடங்கப்பட்டுள்ளது.**
    - இது இந்தியப் பெருநகரங்கள் மற்றும் சிறு நகரங்களின் காலாண்டுத் தூய்மைக் கணக்கெடுப்பிற்கான ஒரு ஆய்வாகும்.
    - நகரங்களின் தூய்மை நிலையைத் தொடர்ந்து கண்காணித்தல் என்பது SSL குழுவின் ஒரு முன்னுரிமைப் பணியாக விளங்கும்.

- மத்திய கலாச்சார அமைச்சகத்தின் கீழுள்ள இந்தியத் தொல்லியல் துறை ஆய்வகம் **சவுக்கண்டி ஸ்தூபியைத் "தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பாதுகாக்கப்பட்ட ஒரு பகுதியாக" அறிவித்துள்ளது.**
    - **இது உத்தரப் பிரதேசத்தின் சாரநாத்தில் அமைந்துள்ளது.**
    - இது புத்தருடைய எச்சங்களின் நினைவுச் சின்னமாக விளங்குகின்றது. இது சிதைந்த நிலையில் காணப்படுகின்றது. இது அசலாக கி.பி. 5 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது.



WeShine Academy TM

- **மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகம் பணித்துறை புள்ளியியல் மீதான ஒரு "தேசியத் தகவல் கிடங்கை" அமைக்கப் பரிந்துரை செய்துள்ளது.**
    - இது பெருநிலைப் பொருளியல் திரள்களின் தரத்தினை மேலும் மேம்படுத்துவதற்காக பெருந்தரவுப் பகுப்பாய்வுக் கருவிகளைப் பயன்படுத்தவிருக்கின்றது.
    - மேலும் இது தேசியப் புள்ளியியல் ஆணையம் சுதந்திரமாகச் செயல்படுவதற்காக ஒரு சட்டமன்றக் கட்டமைப்பையும் ஏற்படுத்தவிருக்கின்றது.

- **2024 ஆம் ஆண்டளவில் அனைத்து குடிமக்களுக்கும் சுத்தமான குடிநீர் வழங்க மத்திய அரசு உறுதி அளித்துள்ளது என்று ஜல் சக்தி மந்திரி கஜேந்திர சிங் ஷெகாவத் அறிவித்தார்.**
    - சமீபத்தில், ஜல் சக்தி அமைச்சகத்தால் "நல் சி ஜல்" "Nal se Jal" என்ற திட்டம் தொடங்கப்பட்டது. இது 2024 ஆண்டுக்குள் அனைவருக்கும் குடிநீர் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## சர்வதேச நிகழ்வுகள்

- **டாம் டாம் என்ற நிறுவனம் 'Traffic Index – 2108' என்ற தலைப்பில் நடத்திய ஆய்வில், நெரிசல் அளவு 65 சதவீதத்துடன் மும்பை நகரம் முதலிடத்தில் உள்ளது. புது தில்லி 4 ஆவது (58%) இடத்தை பிடித்துள்ளது.**
    - கொலம்பியா தலைநகர் போகோடா (63%) 2 ஆவது இடத்திலும், பெரு தலைநகர் லிமா (58%) 3 ஆவது இடத்திலும், ரஷ்ய தலைநகர் மாஸ்கோ (56%) 5 ஆவது இடத்திலும் உள்ளது.

## விருதுகள்

- **அமெரிக்க எழுத்தாளரான தயாரி ஜோன்ஸ் "An American Marriage" என்னும் தனது புதினத்துக்காக நடப்பாண்டின் புனைவுக் கதைக்கான பெண்கள் பரிசை வென்றுள்ளார்.**
    - £30,

- 000 ரொக்கப் பரிசும், ‘பெஸ்ஸி’ என்னும் ஒரு வெண்கல சிலையும் வழங்கப்பட்டது. இந்தப் பரிசு, பெண்களின் படைப்பாற்றல்களை கொண்டாடும் மிகப்பெரிய சர்வதேச கொண்டாட்டங்களுள் ஒன்றாகும்.

## வர்த்தக நிகழ்வுகள்

- **இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்.பி.ஐ) ஏ.டி.எம். கட்டணங்கள் மற்றும் மற்ற கட்டணங்கள் முழுவதையும் ஆய்வு செய்ய இந்திய வங்கிகள் சங்கத்தின் (IBA) தலைமை நிர்வாகியான வி.கே. கண்ணன் தலைமையில் ஒரு உயர் மட்ட குழு ஒன்றை அமைத்துள்ளது.**

We Shine Academy™